click here to learn more: https://bit.ly/2WeYJfo

# சமூக அறிவியல்

## வரலாறு

- இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள்
- வடஇந்தியப் புதிய அரசுகளின் தோற்றம்
- தென்னிந்தியப் புதிய அரசுகள் – பிற்காலச் சோழர்களும் பாண்டியர்களும்
- டெல்லி சுல்தானியம்
- விஜய நகர், பாமினி அரசுகள்
- முகலாயப் பேரரசு
- மராத்தியர்கள் மற்றும் பேஷ்வாக்களின் எழுச்சி
- புதிய சமயக் கருத்துகளும் இயக்கங்களும்
- தமிழ்நாட்டில் கலையும் கட்டடக் கலையும்
- தமிழகத்தில் சமணம், பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள்
- ஐரோப்பியர்களின் வருகை
- வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை
- கிராம சமூகமும் வாழ்க்கை முறையும்
- மக்களின் புரட்சி
- இந்தியாவில் கல்வி வளர்ச்சி
- இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி
- ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள்
- காலங்கள்தோறும் இந்தியப் பெண்களின் நிலை

## புவியியல்

- புவியின் உள்ளமைப்பு
- நிலத்தோற்றங்கள்
- மக்கள்தொகையும் குடியிருப்புகளும்
- வளங்கள்
- சுற்றுலா
- கண்டங்களை ஆராய்தல் – வட அமெரிக்கா மற்றும் தென்அமெரிக்கா
- நிலவரைபடத்தை கற்றறிதல்
- இயற்கை இடர்கள் – பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை புரிந்துகொள்ளல்
- பாறை மற்றும் மண்
- வானிலையும் காலநிலையும்
- நீரியல் சுழற்சி
- இடம் பெயர்தல் மற்றும் நகரமயமாதல்
- இடர்கள்
- தொழிலகங்கள்
- கண்டங்களை ஆராய்தல் (ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா)
- புவிப்படங்களைக் கற்றறிதல்

## குடிமையியல்

- சமத்துவம்
- அரசியல் கட்சிகள்
- மாநில அரசு
- ஊடகமும் ஜனநாயகமும்
- பெண்கள் மேம்பாடு
- சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு
- குடிமக்களும் குடியுரிமையும்
- சமயச் சார்பின்மை
- மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும்
- பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை
- நீதித்துறை
- சாலை பாதுகாப்பு

## பொருளியல்

- உற்பத்தி
- வரி மற்றும் அதன் முக்கியத்துவம்
- பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள்
- பொது மற்றும் தனியார் துறைகள்



click here to learn more: https://bit.ly/2WeYJfo

click here to learn more: https://bit.ly/2WeYJfo

# சமூக அறிவியல்

## வரலாறு

## இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள்

இந்திய வரலாற்றில் கி.பி. 700 முதல் 1200 வரையிலான காலகட்டத்தை இடைக்கால வரலாற்றுக்காலம் என்றும் கி.பி. 1200 முதல் 1700 வரையிலான காலத்தை பின் இடைக்கால வரலாற்றுக்காலம் என்றும் வகைப்படுத்தியுள்ளனர்.

**சான்றுகள்**

**முதல்நிலைச் சான்றுகள்**

பொறிப்புகள் (கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள்), நினைவுச் சின்னங்கள், நாணயங்கள்.

**இரண்டாம் நிலைச் சான்றுகள்**

இலக்கியங்கள், கால வரிசையிலான நிகழ்வுப் பதிவுகள், பயணக்குறிப்புகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், சுயசரிதைகள்.

### பொறிப்புகள் (Inscriptions)

பொறிப்புகள் என்பன பாறைகள், கற்கள், கோயில் சுவர்கள், உலோகங்கள் ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பின் மேல் பொறிக்கப்பட்ட எழுத்துகளாகும்.

**பொறிப்புகளில் உள்ள செய்திகள் :** அரசர் பிறப்பித்த பேராணைகள், அவர் அர்ப்பணித்தவை, கொடுத்த கொடைகள், போர்களில் பெற்ற வெற்றிகள், போரில் மடிந்த வீரர்களின் நினைவாக எழுப்பப்பட்ட நினைவுச் சின்னங்கள் போன்றவையாகும்.

13–ஆம் நூற்றாண்டு முதலாக இஸ்லாமிய பாரசீகத்தின் நடைமுறைகளின் காரணமாகவும், செப்புப் பட்டயங்களின் விலை அதிகமானதாலும் குறைந்த செலவிலான பனையோலைகளும் காகிதமும் பயன்பாட்டுக்கு வந்தன.

**பிற்காலச் சோழர்களின் செப்புப்பட்டயங்கள் :** இவர்களின் காலம் 10 முதல் 13–ஆம் நூற்றாண்டு வரையாகும். இவர்கள் காலத்தில் வெளியிடப்பட்ட செப்புப்பட்டயக் கொடை ஆவணங்களில் பதிவு செய்யப்பட்ட செய்திகள் :

❖ இந்து, பௌத்த, சமண சமயத்தை சேர்ந்த குருமார்களுக்கோ துறவிகளுக்கோ வழங்கப்பட்ட கொடைகள் குறித்த செய்திகள்.

❖ கொடை வழங்கியவர் கொடை பெற்றவர் குறித்த செய்திகள்.

**கல்வெட்டுகளில் பதிவுசெய்யப்பட்ட செய்திகள்**

இவற்றில் கொடை வழங்கியவர் மீது மட்டுமே சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு, அவரின் அறச்செயல்கள் அதிகம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(எ.கா.) : முதலாம் இராஜேந்திர சோழனின் திருவாலங்காடு செப்பேடுகள். சுந்தரச் சோழனின் அன்பில் செப்பேடுகள். காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் கல்வெட்டுகள்

❖ உத்திரமேரூர் கல்வெட்டில் கிராமங்கள் நிர்வகிக்கப்பட்ட முறைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**கொடைவகைகள் :**

| | |
|---|---|
| **வேளாண்வகை** | பிராமணரல்லாத உடைமையாளருக்குச் சொந்தமான நிலங்கள் |
| **பிரம்மதேயம்** | பிராமணர்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் |
| **சாலபோகம்** | கல்வி நிலையங்களைப் பராமரிப்பதற்காக வழங்கப்பட்ட நிலங்கள் |
| **தேவதானம்** | கோயில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் |
| **பள்ளிச் சந்தம்** | சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் |

**நினைவுச்சின்னங்கள்**

**வகைகள் :** கோயில்கள், அரண்மனைகள், மசூதிகள், கல்லறைகள், கோட்டைகள், கோபுரங்கள், ஸ்தூபிகள்.

| | |
|---|---|
| **வட இந்தியாவில் உள்ள கோயில்கள்** | கஜுராகோ கோயில்கள் – மத்தியப்பிரதேசம்<br>தில்வாரா கோயில்கள் (அபுகுன்று) – இராஜஸ்தான்<br>கொனார்க்கில் உள்ள கோயில்கள் – ஒடிசா |
| **பிற்காலச் சோழர்கள் கட்டிய கோயில்கள்** | பிரகதீஸ்வரர்கோயில் – தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம் கோயில்<br>ஐராவதீஸ்வரர் கோயில் – தாராசுரம் |
| **விஜயநகரப் பேரரசு கட்டிய கோயில்கள் (15–ஆம் நூற்றாண்டு)** | ஹம்பியில் உள்ள விட்டலா கோயில் மற்றும் விருப்பாக்சா கோயில். |
| **மசூதிகள்** | **டெல்லி மற்றும் அதன் அருகாமையில் அமைந்துள்ள இடங்கள் :**<br>குவ்வத்–உல்–இஸ்லாம் மசூதி மோத்–கி–மசூதி<br>ஜமா மசூதி பதேப்பூர் சிக்ரி தர்கா<br>**ஹைதராபாத்** – சார்மினார் |
| **கோட்டைகள்** | ஆக்ரா கோட்டை, சித்தூர் கோட்டை, குவாலியர் கோட்டை, டெல்லி செங்கோட்டை, தௌலதாபாத் (அவுரங்காபாத்) பிரோஷ் ஷாகொத்தளம் (டெல்லி) |



click here to learn more: https://bit.ly/2WeYJfo

click here to learn more: https://bit.ly/2WeYJfo



| | |
|---|---|
| **இராஜபுத்திரர்களின் அரண்மனைகள் (மேன்மைக்கான அடையாளங்கள்)** | ஜெய்ப்பூர், ஜெய் சால்மர், ஜோத்பூர் அரண்மனைகள் |
| **கல்லறைகள் (மதிப்புமிக்க சான்றுகள்)** | இல்துமிஷ், பால்பன் மற்றும் அனைத்து முகலாய அரசர்களின் கல்லறைகள். |
| **பாழடைந்த நகரங்கள் (இடைக்கால இந்திய வரலாற்றுக் கருவூலங்கள்)** | பிரோஷாபாத், துக்ளகாபாத் – வட இந்தியா<br>ஹம்பி – தென்னிந்தியா |

டெல்லி சுல்தான்கள் புது வகையான கட்டடக்கலையை அறிமுகம் செய்தனர். வளைவுகள், ஒடுங்கிய வடிவக் கோபுரங்கள், குவிமாடங்கள் ஆகியன முக்கியக் கூறுகளாகும். இந்த நினைவுச் சின்னங்களில் உள்ள கல்வெட்டுகள் வரலாற்றை அறிய உதவுகின்றன.

**நாணயங்கள்**

**நாணயங்களில் பொறிக்கப்பட்டவை :**

- அரசர்களுடைய உருவப்படங்கள்
- அரசர்களின் பெயர்கள்
- அரசர்களின் பட்டங்கள்
- அரச வம்சத்தின் பெயர்கள்
- நிகழ்வுகள் மற்றும் அவை நடைபெற்ற இடங்கள், காலம்
- அரசர்களின் இராணுவப் படையெடுப்புகள்
- பிரதேச விரிவாக்கம்
- வணிகத் தொடர்புகள்
- சமய நம்பிக்கைகள்
- நாணயங்களில் உள்ள உலோகக் கலவை பேரரசின் **பொருளாதார நிலை** குறித்து விளக்குகின்றன.
- முகமது கோரி தான் வெளியிட்ட தங்க நாணயத்தில் பெண் தெய்வமான இலட்சுமி வடிவத்துடன் தன் பெயரையும் பொறிக்கச் செய்தார்.
- இது தொடக்ககால துருக்கியப் படையெடுப்பாளர்கள் மதவிஷயங்களில் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொண்டதற்கான சான்றாகும்.

**ஜிட்டல் :** டெல்லி சுல்தான்களின் காலகட்டத்தை அறிந்துகொள்ள உதவும் செப்புநாணயங்கள் ஆகும்.

**டாங்கா :** இல்துமிஷ் அறிமுகம் செய்த வெள்ளி நாணயம் ஆகும்.

அலாவுதீன் கில்ஜியின் தங்க நாணயங்கள், துக்ளக்கின் செப்பு நாணயங்கள் முறையே நாட்டின் பொருளாதார வளத்தையும் நலிவையும் சுட்டிக்காட்டுகின்றன.

- ஒரு ஜிட்டல் என்பது 3.6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டதாகும்.
- 48 ஜிட்டல்கள் 1 வெள்ளி டாங்காவிற்குச் சமமாகும்.

**சமய இலக்கியங்கள்**

**சோழர்களின் காலம்** பக்தி இலக்கியங்களின் காலமாகும்.

**சோழர்கால இலக்கியங்கள் : கம்பராமாயணம்**, சேக்கிழாரின் **பெரியபுராணம்**, பன்னிரு ஆழ்வார்களால் இயற்றப்பட்டு நாதமுனியால் தொகுக்கப்பட்ட **நாலாயிர திவ்விய பிரபந்தம்**, அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் இயற்றப்பட்டு நம்பியாண்டார் நம்பிகளால் தொகுக்கப்பட்ட **தேவாரம்.** மாணிக்கவாசகரின் **திருவாசகம்.**

**கீதகோவிந்தம் :** ஜெயதேவரால் 12–ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட இந்நூல் தென்னிந்திய பக்தி இலக்கிய மரபின் தொடர்ச்சியாகும்.

**கபீர்தாஸ் :** 15–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இவர் பக்தி இயக்கத்தால் கவரப்பட்டவர் ஆவார்.

**சமய சார்பற்ற இலக்கியங்கள்**

**விஜயநகரப் பேரரசுடன் தொடர்புடைய நிகழ்வுகளை அறிய உதவும் சான்றுகள் :** கங்காதேவியால் இயற்றப்பட்ட **'மதுரா விஜயம்'** கிருஷ்ணதேவராயரால் இயற்றப்பட்ட **'ஆமுக்த மால்யதா'.**

**இராஜபுத்திர அரசர்களின் மனத் துணிச்சலை வெளிப்படுத்தும் சான்று :** சந்த்பார்தையின் **'பிருதிவிராஜ ராசோ'.**

**ராஜதரங்கிணி :** கல்ஹணர் இயற்றிய இந்நூல் 11–ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இது, இஸ்லாமுக்கு முந்தைய காலம் குறித்து உள்ள ஒரே சான்று ஆகும்.

**நூல்கள், வாழ்க்கை வரலாறுகள், சுயசரிதைகள்**

| ஆசிரியர் | நூலின் பெயர் | நூலில் கூறப்பட்ட செய்திகள் |
|---|---|---|
| மின்கஜ் உஸ் சிராஜ் (அடிமை வம்ச சுல்தான் நஸ்ருதின் மாமூதுவால் ஆதரிக்கப்பட்டவர்) | தபகத் – இ – நஸிரி | முகமது கோரியின் படையெடுப்பில் தொடங்கி கி.பி. 1260 வரையிலான நிகழ்வுகள் கூறப்பட்டுள்ளன. |
| ஹசன் நிஜாமி | தாஜ் – உல் – மா – அசிர் | குத்புதீன் ஐபெக் பற்றிய பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. டெல்லி சுல்தானியத்தின் வரலாற்றைக் கூறும் முதல் நூலாகும். |
| ஜியா – உத் – பரணி (துக்ளக் அரசவையின் வரலாற்றாசிரியர்) | தாரிக் – இ – பிரோஷாகி | கியாசுதீன் பால்பன் முதல் பிரோஷ்ஷா துக்ளக்கின் தொடக்ககால ஆட்சி வரையிலான டெல்லி சுல்தானியத்தின் வரலாற்றைக் கூறுகிறது. |
| பெரிஷ்டா (16–ஆம் நூற்றாண்டு) | தாரிக் – இ – பெரிஷ்டா | இந்தியாவில் முகலாய ஆட்சியின் எழுச்சி குறித்து விவரிக்கிறது. |
| பாபர் (16–ஆம் நூற்றாண்டு) | பாபர் நாமா | சுயசரிதை |



click here to learn more: https://bit.ly/2WeYJfo

click here to learn more: https://bit.ly/2WeYJfo



| | | |
|---|---|---|
| அபுல் பாசல் | அயினி அக்பரி, அக்பர் நாமா | இவ்விரு நூல்களும் அக்பர் குறித்த விவரங்களை முழுமையாகத் தருகின்றன. |
| ஜஹாங்கீர் (17–ஆம் நூற்றாண்டு) | தசுக் – இ – ஜஹாங்கீரி | சுயசரிதை அக்காலகட்ட வரலாற்றை வெளிப்படையாகக் கூறுகிறது. |
| பதானி | தாரிக் – இ – பதானி (பதானியின் வரலாறு) | 1595–இல் வெளியிடப்பட்ட இந்நூல் மூன்று தொகுதிகளைக் கொண்டது. இந்நூல் அக்பருடைய ஆட்சி முறை, நிர்வாகம், மதக்கொள்கை குறித்து ஒளிவு மறைவின்றி வெளிப்படையான கருத்துகளை முன்வைக்கிறது. |
| நிஜாமுதீன் அகமத் | தபகத் – இ – அக்பரி | அபுல்பாசலின் மிகைப்படுத்திக் கூறும் தன்மையைக் காட்டிலும் நம்பகத்தன்மை வாய்ந்த தகவல்களைக் கொண்டுள்ளது. |

| சொல் | மொழி | பொருள் |
|---|---|---|
| தபகத் | அரேபியம் | தலைமுறைகள் அல்லது நூற்றாண்டுகள் |
| தஜூக் | பாரசீகம் | சுயசரிதை |
| தாரிக் அல்லது தாகுயூக் | அரேபியம் | வரலாறு |

**பயணிகளும் பயண நூல்களும்**

**மார்கோபோலோ**

இவர் வெனிஸ் நகரைச் சேர்ந்த பயணி ஆவார். 13–ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் பாண்டிய அரசு வலிமை வாய்ந்த சக்தியாக உருவாகிக் கொண்டிருந்த போது இவர் வருகைபுரிந்தார். இவர் தமிழகத்தில் **காயல்** (தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது) என்ற ஊருக்கு இரு முறை வந்துள்ளார்.

**அவர் அளித்த தகவல்கள் அடிப்படையிலான சான்றுகள் :** காயல் என்பது அரேபியாவிலிருந்தும், சீனாவிலிருந்தும் வந்த கப்பல்களால் நிரம்பியிருந்த துறைமுகப்பட்டினமாகும்.

சீனாவிலிருந்து இவர் கப்பலில் வந்ததாகவும். பாரசீகத்திலிருந்து ஆயிரக்கணக்கில் குதிரைகள் தென்னிந்தியாவில் கடல்வழியாக இறக்குமதி செய்யப்பட்டன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**அல் – பரூனி (11–ஆம் நூற்றாண்டு)**

1. இவர், கஜினி மாமூதின் படையெடுப்பின் போது அவருடன் இந்தியாவிற்கு வருகை புரிந்த பயணி ஆவார்.
2. இவர் இந்தியாவில் 10 ஆண்டுகள் தங்கியிருந்து இந்தியாவையும் அதன் மக்களையும் குறித்து ஆய்வு செய்து **'தாகுயூக் – இ – ஹிந்த்'** என்ற நூலை எழுதியுள்ளார்.
3. இந்நூலில் இந்திய மக்களின் சமூக விதிகள், மதங்கள், அறிவுநிலை குறித்து எழுதியுள்ளார். இந்தியத் தத்துவங்களையும் சமஸ்கிருத மொழியையும் கற்றுக் கொண்டார்.
4. கஜினி மாமூதின் சோமநாதபுர படையெடுப்பு குறித்த துல்லியமான தகவல்கள் இவர் அளித்ததாகும்.

**இபின் பதூதா (14–ஆம் நூற்றாண்டு)**

❖ இவர் அரேபியாவில் பிறந்த மொராக்கோ நாட்டு அறிஞர் ஆவார். மொராக்கோவிலிருந்து வடஆப்பிரிக்காவின் குறுக்காக எகிப்தை அடைந்து, பின்னர் மத்திய ஆசியா வழியாக இந்தியா வந்தடைந்தார்.

❖ இவருடைய பயண நூலான 'ரிக்ளா' (பயணங்கள்) இவர் பயணம் செய்த நாடுகள் மற்றும் அங்கு வாழ்ந்த மக்கள் பற்றிய விவரங்களைத் தருகின்றது.

❖ எகிப்து நாடு மிகவும் செல்வ வளம் கொண்ட நாடு என்று இவர் கருதினார். ஏனெனில் மேற்கத்திய நாடுகளுடனான இந்தியாவின் வணிகம் முழுவதும் எகிப்தின் வழியாகவே நடைபெற்றது.

❖ இந்தியாவின் சாதி முறை பற்றியும் சதி (உடன்கட்டை ஏறுதல்) பழக்கம் குறித்தும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

❖ இந்திய வணிகர்களின் விறுவிறுப்பான வணிக நடவடிக்கைகள் குறித்து குறிப்பிட்டுள்ளார். டெல்லி ஒரு பரந்து விரிந்த நேர்த்தியான நகரம் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவர் குறிப்பிட்ட காலகட்டத்தில்தான் முகமது பின் துக்ளக் தலைநகரை டெல்லியிலிருந்து தெற்கேயிருந்த தேவகிரிக்கு (தௌலதாபாத்) மாற்றினார் டெல்லியை பாழ்படுத்திவிட்டார்.

**விஜயநகரப் பேரரசிற்கு வருகைபுரிந்த அயல்நாட்டுப் பயணிகள்**

| பயணி | வருகைபுரிந்த ஆண்டு | நாடு |
|---|---|---|
| நிகோலோ கோண்டி | 1420 | இத்தாலி |
| அப்துர் ரஸாக் | 1443 | மத்திய ஆசியாவின் ஹீரட் நகர் (செங்கிஸ்கானின் அரசவை இருந்த இடம்) |
| டோமிங்கோ பயஸ் | 1522 | போர்த்துகீசியம் |



click here to learn more: https://bit.ly/2WeYJfo

click here to learn more: https://bit.ly/2WeYJfo



## பயிற்சி வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

1. **.................... என்பவை பாறைகள், கற்கள், கோயில் சுவர்கள், உலோகங்கள் ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பின் மீது செதுக்கப்படும் வாசகங்களாகும்.**
   A) காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள்
   B) பயணக்குறிப்புகள்
   C) நாணயங்கள்
   D) பொறிப்புகள்

2. **கோயில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் .................... ஆகும்.**
   A) வேளாண்வகை B) சாலபோகம்
   C) பிரம்மதேயம் D) தேவதானம்

3. **.................... களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலமென அறியப்படுகிறது.**
   A) சோழர் B) பாண்டியர்
   C) ராஜபுத்திரர் D) விஜயநகர அரசர்கள்

4. **முதல் டெல்லி சுல்தான் பற்றிய தகவல்களைக் கூறும் நூல் .................... ஆகும்.**
   A) அயினி அக்பரி
   B) தாஜ் – உல் – மா – அசிர்
   C) தசுக் – இ – ஜஹாங்கீரி
   D) தாரிக் – இ – பெரிஷ்டா

5. **அரேபியாவில் பிறந்து இந்தியாவிற்கு வந்த மொராக்கோ நாட்டு அறிஞர் .................... ஆவார்.**
   A) மார்க்கோபோலோ B) அல்–பரூனி
   C) டோமிங்கோ பயஸ் D) இபன் பதூதா

6. **தொடக்க இடைக்கால இந்திய வரலாற்றின் காலம் ....................**
   A) கி.பி. 700 முதல் 1200 வரை
   B) கி.பி. 1200 முதல் 1700 வரை
   C) கி.பி. 900 முதல் 1200 வரை
   D) கி.பி. 1200 முதல் 1900 வரை

7. **சான்றுகள் .................... வகைப்படும்.**
   A) ஒன்று B) இரண்டு
   C) மூன்று D) நான்கு

8. **பொறிப்புகள், நினைவுச் சின்னங்கள், நாணயங்கள் ஆகியவை .................... சான்றுகள் ஆகும்.**
   A) மூன்றாம் நிலைச் சான்றுகள்
   B) இரண்டாம் நிலைச் சான்றுகள்
   C) முதல் நிலைச் சான்றுகள்
   D) நான்காம் நிலைச் சான்றுகள்

9. **கீதகோவிந்தம் என்ற நூலை எழுதியவர் ....................**
   A) ஜெயதேவர் B) அப்பர்
   C) மாணிக்கவாசகர் D) சேக்கிழார்

10. **.................... பற்றிய பல செய்திகளை தாஜ்–உல்–மா–அசிர் என்ற நூல் முன் வைக்கிறது.**
    A) நஸ்ருதின் B) இபன்பதூதா
    C) கஜினி மாமுத் D) குத்புதின் ஐபக்

11. **தபகத் என்பது .................... சொல் ஆகும்.**
    A) இலத்தீன் B) சமஸ்கிருதம்
    C) அரேபியம் D) உருது

12. **.................... துறைமுகம் அரேபியாவிலிருந்தும், சீனாவிலிருந்தும் வந்த கப்பல்களால் நிரம்பியிருந்த துறைமுகப் பட்டினமாகும்.**
    A) காயல் B) மதுரை
    C) சென்னை D) கொல்கத்தா

13. **இபன் பதூதாவின் கருத்துப்படி .................... செல்வம் கொழித்த நாடாகும்.**
    A) கெய்ரோ B) சீனா
    C) எகிப்து D) இந்தோனேசியா

14. **முகமது பின் துக்ளக் தனது தலைநகரை ....................யில் இருந்து தேவகிரிக்கு மாற்றினார்.**
    A) டெல்லி B) மும்பை
    C) லாகூர் D) காஷ்மீர்

15. **மதுரா விஜயம், ஆமுக்த மால்யதா ஆகிய இலக்கியங்கள் .................... பேரரசுடன் தொடர்புடையவை.**
    A) சோழ B) விஜயநகர
    C) டெல்லி D) சந்தேலர்கள்

**II. Directions (16-18) : பொருத்துக.**

16. a) கஜுராகோ — 1. ஒடிசா
    b) கொனார்க் — 2. ஹம்பி
    c) தில்வாரா — 3. மத்தியப்பிரதேசம்
    d) விருப்பாக்சா — 4. ராஜஸ்தான்

குறியீடுகள் :

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 2 |
| B) | 1 | 4 | 2 | 3 |
| C) | 4 | 2 | 3 | 1 |
| D) | 2 | 3 | 1 | 4 |

17. a) சேக்கிழார் — 1. தாரிக்–இ–பதானி
    b) மாணிக்கவாசகர் — 2. மதுரா விஜயம்
    c) கங்கா தேவி — 3. ஆமுக்த மால்யதா
    d) கிருஷ்ண தேவராயர் — 4. பெரியபுராணம்
    e) பதானி — 5. திருவாசகம்

குறியீடுகள் :

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| A) | 4 | 5 | 2 | 3 | 1 |
| B) | 3 | 4 | 2 | 5 | 1 |
| C) | 4 | 3 | 1 | 5 | 2 |
| D) | 2 | 5 | 4 | 3 | 1 |

18. a) சார்மினார் — 1. அரண்மனை
    b) பிரோஷ் ஷா கொத்தளம் — 2. ஹைதராபாத்
    c) ஜோத்பூர் — 3. பிரகதீஸ்வரர் கோயில்
    d) அலெய்தர் வாஷா — 4. கல்லறைகள்
    e) தஞ்சாவூர் — 5. டெல்லி

குறியீடுகள் :

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 5 | 1 | 4 | 3 |
| B) | 2 | 4 | 5 | 3 | 1 |
| C) | 5 | 4 | 1 | 2 | 3 |
| D) | 5 | 5 | 2 | 1 | 3 |

www.surabooks.com



click here to learn more: https://bit.ly/2WeYJfo